கல்வியமைச்சு – **E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 01

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

தமிழ் மொழியும் இலக்கியமும் **I, II** ஒரு மணித்தியாலம்

**Tamil Language and Literature I, II** **One hours**

தமிழ் மொழியும் இலக்கியமும் I

# விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 - (3) | 11 - (2) | 21 - (2) | 31 - (2) |
| 2 - (3) | 12 - (1) | 22 - (1) | 32 - (3) |
| 3 - (3) | 13 -(4) | 23 - (2) | 33 - (1) |
| 4 - (3) | 14 -(3) | 24 - (3) | 34 - (4) |
| 5 - (1) | 15 -(1) | 25 - (2) | 35 - (3) |
| 6 - (4) | 16 -(3) | 26 - (4) | 36 - (1) |
| 7 - (2) | 17 - (3) | 27 - (1) | 37 - (2) |
| 8 - (4) | 18 - (2) | 28 - (3) | 38 - (3) |
| 9 - (1) | 19 - (2) | 29 - (2) | 39 - (4) |
| 10 - (2) | 20 - (3) | 30 - (3) | 40 - (4) |

**கல்வியமைச்சு – E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 02

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

## விடைகள்

1. சுருக்கமான விடை எழுதுக.

i. வன் + தூண் + இடை + தோன்றிய + மா + நரசிங்கம் + என்ன

ii. உன்னிடம் என்ன இருக்கிறது? பார்ப்பதற்கு ஓகோ! அப்படியா உமக்கு யோசனை.

iii. ‘‘பெண்டிர் தன்மையுடையீர்! பெண்பாவமன்றோ? பெரிய வசை கொள்வீரோ’’

iv. எழுவாய் : நான்

பயனிலை : எடுத்தேன் ஓட்டம்.

v. கூறியது கூறல், குறுக்கிட்டுப் பேசுதல், முன்பின் முரணாகப் பேசுதல்

vi. எனினும் - நீ அந்த விழாவிற்கு வந்திருந்தாய் எனினும், உன்னை நான் காணவில்லை.

vii. பெயர் : எனது தங்கையின் முகம் மதி போல பிரகாசமாயிருந்தது.

வினை : நாம் ஒவ்வொருவரும் பெரியோர் சொல் மதித்து வாழ வேண்டும்.

viii. அ) அறிவித்தல்

ஆ) அறிவுறுத்தல்

ix. உயர்வு நவிற்சி அணி

x. தலைமைத்தொடர் : ஆற்றைக் கடந்து போவாய்.

எச்சத்தொடர் : நீ கவனமாக நடந்து வந்தால்,

(20 புள்ளிகள்)

[பக்.2 ஐப் பார்க்க

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடையெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

**i. பொருத்தமான தலைப்புகள்:**

- கைத்தொலைபேசி பாவனைக்கான வழிமுறைகள்
- கைத்தொலைபேசியும் இன்றைய மாணவர்களும்
- கைத்தொலைபேசியும் நாமும்.

**தீமைகள்**

- நேரம் வீண்விரயம்
- ஆரோக்கியமான மனித வாழ்வு பாதிப்புக்கள்
- சைபர் குற்றங்கள் அதிகரிப்பு
- மனிதன் தனித்து வாழ்தல் அதிகரிப்பு
- சமூக தொடர்புகளில் நாட்டமின்மை
- வேலையில்லாமை அதிகரிப்பு
- தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்துவது அதிகரிப்பு
- துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படல்
- கல்வியில் ஆர்வம் குறைவு
- கலாசார சீரழிவு

**முறையாக பயன்படுத்துவற்க்கான வழிமுறைகள்**

- கற்றலின் தேவைகளின் போது மாத்திரம் பயன்படுத்தல்.
- பொருத்தமான நேரம் ஒன்றை ஒதுக்கிக்கொள்ளல்
- கைபேசியின் உதவியுடன் கற்பதைவிட நூல்கள் துணையுடன் கற்பதற்கு ஆர்வம் காட்டல் சிறந்தது.
- உடற்பயிற்சியில் ஈடுபடல்.
- பாவனை நேரத்தை குறைத்தல்.
- பாரம்பரிய கற்றலில் கவனம் செலுத்துதல்.
- குடும்ப உறவுகளுடன் தொடர்பு - கூட்டுறவு வாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**ii. பொருத்தமான சில தலைப்புக்கள்**

- இயற்கையும் நாமும்
- இயற்கையின் அவசியம்

**அவதானிப்புக்குரியவை**

சபையோரை விளித்தல், வணக்கம் கூறுதல், பேசப் போகும் தலைப்பைத்

தொடர்புபடுத்தி பேசுதல்

**பாதிப்புக்கள்**

- காடுகள் அழிப்பதால் பூமி பெப்பம் அடைதல்
- மண்சரிவு ஏற்படுதல், நிலநடுக்கம், வெள்ளபெருக்கு
- காலநிலை மாற்றம், குடிநீர் பிரச்சினை வரட்சி, இயற்கைப் பாதிப்பு, உயிரினங்களின் அழிதல் போன்றன.
- சூழல் சமநிலையில் பாதிப்பு.
- அரிய உயிரினங்களின் அழிவுறுதல்.

**தடுப்பதற்கான வழிமுறைகள்**

- காடுகளற்ற தரிசு நிலங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ளல்.
- தரிசு நிலங்களில் மரங்களை நடுதல்.
- மரங்களினால் பாவனையைக் குறைத்தல்.

- மர நடுகை தினத்தினை முன்னெடுத்தல்.
- காடு, கடல் நீர் பாதுகாப்பு போன்ற காப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- இயற்கை பாதிப்பற்ற அபிவிருத்தியை முன்னெடுத்தல்.

**iii. பொருத்தமான தலைப்புக்கள்**

- உணவு பழக்கமும் மனித வாழ்வும்
- உணவு பழக்கமும் ஆரோக்கிய வாழ்வும்

**வீட்டுணவின் நன்மைகள்**

- செலவு குறைவு.
- சுவை அதிகம்.
- பாதுகாப்பானது ஆரோக்கியத்திற்கு உதவுவது.
- தேவைக்கேற்ற வகையில் சமைத்துக் கொள்ளலாம்.
- உடல் நலத்திற்கு ஏற்றது.
- சிக்கமானது மகிழ்ச்சி தருவது.
- பகிர்ந்து உண்ண முடியும்.
- விருந்தோம்பல் பண்புடையது.
- குடும்ப உறவினை மேம்படுத்தும்.

**துரித உணவின் நன்மைகள்**

- நேர வீண் விரயம் இல்லை.
- எல்லா இடங்களிலும் நினைத்த போது பெற்றுக்கொள்ள கூடியது.
- சுவையும் கவர்ச்சிகரமான தோற்றமும் உடையது.
- தொழினுட்ப உலகிற்கு ஏற்றது.
- வேலை பளு இல்லை.
- சுவையும் வியாபாரமும் நோக்காக கொண்டது.
- இலாபத்தை நோக்காகக் கொண்டு தயாரிப்பது.

**iv. பொருத்தமான தலைப்புக்கள்**

- முயற்சி திருவினையாக்கும்.
- முயற்சி வெற்றி தரும்.

**கவனிக்க வேண்டிய விடயம்**

- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்பட வேண்டும்.
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பசைன் செறிவுடன் எழுதப்படல்.
- கதையை விறுவிறுப்பாக நகரத்திச் செல்லல்.
- இயல்பான கவர்ச்சியான கதையோட்டம்.
- கதைக்குப் பொருத்தமான மொழிநடை.
- இயல்பான பாத்திர உரையாடல்.
- படிப்பினை மறைமுகமாக வெளிப்படல்.
- முடிவு பொருத்தமாக அமைதல்.

(25புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

**சுருக்கத்தில் உள்ளடங்கும் முக்கிய கருத்துக்கள்**

- தகவலைப் பெற முக்கிய வழி வாசிப்பு.
- ஏனைய எல்லா திறனுக்கும் அடிப்படையானது.
- திறம்பட செயற்பட அவசியம்.
- வாசிப்பு இன்றி உள நிலை பாதிப்பு அதிகம்.
- நல்ல தொழிலுக்கும் வாசிப்பு அவசியமாகும்.
- இத்திறன் இன்றி அக்கறை குறையும்.
- மொழித்திறன் அதிகரிக்கும்.
- இவை ஏனையோருக்கும் கருத்துக்களை புரிந்துக் கொள்ளவும் உதவுகிறது.

(10 புள்ளிகள்)

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. நாட்டு மக்களின் ஆவேசம் உரிமைக்குரல் ஆங்காங்கே ஒலிக்கப்படுகின்றன.

ii. எதிர் காலத்தை நோக்கும் கண்ணோட்டமும், அதனை ஆதாரமாகக் கொண்டு சமூக இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களை கலந்தால் நிச்சயம் புதிய வாழ்வு பெறும்.

iii. இங்கிலாந்து, அமெரிக்கா

iv. ஆயுத எதிர்ப்பு, சமாதானக் கோரிக்கை, அமெரிக்கா ஏகாதிபத்திய எதிர்ப்பு, பலவிதமான உரிமைப் போராட்டம்

v. இ. பழைய நாட்டார் மெட்டுக்களில் புதிய பாடல் பாடப்படுவதன்று.

(10 புள்ளிகள்)

5. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது எழுதுக.

i. **விடை :**
- உற்பத்தி ஊக்குவிக்கப்படுவதற்க்கான அவசியம்
- சிக்கனம், உழைப்பு, உற்பத்தி ஊக்கத்தின் அவசியம்
- மாணவர் பெறும் அனுபவம்.
- நெருக்கடியில் உற்பத்தியால் ஏற்படும் நன்மைகள்.
- பாடசாலைக்குக் கிடைக்கின்ற நன்மைகள்.
- நாட்டின் எதிர்காலத்தில் இத்திட்டதால் கிடைக்ககூடிய நன்மைகள்

**அல்லது**

ii. **விடை :**

- கொரோனா நோய் பற்றிய விளக்கம்.
- அதனால் கல்வியில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்.
- மாணவர் மேற்கொள்ள வேண்டிய சுகாதார பழக்கவழக்கங்கள்
- மாணவருக்கு ஏற்படும் நன்மைகள்.
- நாட்டிற்கு ஏற்படும் நன்மைகள்.

(15 புள்ளிகள்)

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 02**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III** **இரண்டு மணித்தியாலம்**

**Tamil Language and Literature III** **Two hours**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

**கவனிக்க :**
- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

## <u>விடைகள்</u>

1.

(i) (அ) பெண் அடிமைத்தனம்

(ஆ) உவமையணி

(ii) (அ) சங்கவை

(ஆ) பாவை / பொம்மை

(iii) (அ) மூத்தம்மா

(ஆ) ஒளி

(iv) (அ) மிகவும் இனிமையானது

(ஆ) துன்பம்

(v) (அ) விலக்கி / நீக்கி

(ஆ) நாய் போன்றவரின் நட்பைத்தழுவ வேண்டும்

(vi) (அ) கணினி / கம்பியூட்டர்

(ஆ) இரகசியம்

(vii) (அ) காளமேகப்புலவர்

(ஆ) உருவ அணி

(viii) (அ) வீமன்

(ஆ) மகாபாரதம்

(ix) (அ) வேர், மரம், பயன்

(ஆ) நித்தியம், நைமித்தியம், காமியம்

(x) (அ) ஒரு காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது

(ஆ) திரை இருண்டு பின் மறுகாட்சி வருவது

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

2.

(i) (அ) உவமையணி – கடுமையான போரில் கௌரவர்களும் பாண்டவர்களும் அழிவதற்கு உவமையாக மூங்கில் காடு ஒன்றோடு ஒன்று உரசி தீப்பற்றி எரிவது காட்டப்பட்டுள்ளது.

உவமானம் - மூங்கில் காடு

உவமேயம் - கௌரவர்களும், பாண்டவர்களும்

பொதுத்தன்மை - பேரழிவு

(ஆ) ஆம்பல் மலரும், தாமரை மலரும் வாசனை வீசுகின்ற வயல்களையுடைய குருநாடு

(ii) (அ) ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருதல்
அதன்பின்பு பறவையினம் தொடர்ந்து வருதல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருதல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருதல்

(ஆ) அரிவி வெட்டுகின்ற இளந்தாரிமாரை கண்ணூறுபடாமல் ஐயனார் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை

(iii) (அ) அறிவுடையோர் நல்லோரின் குணங்களைத் தாம் கண்டவுடன் மகிழ்ந்து உறவு கொண்டு தம்முடன் ஒருங்கு சேரக் கலந்து வாழ்வர்.

அறிவற்றோர் நீண்ட நாட்களாகப் பழகி இருந்த போதும் நல்லவர்களுடைய குணங்களை அறியமாட்டார்கள்

(ஆ) உவமையணி – அறிவற்றோர் நல்லவர்களுடன் இருந்தாலும் அவர்களின் குணங்களை அறியமாட்டார் என்பதற்கு உவமையாக தாமரையுடன் பிறந்து அதனுடைய தேனை நுகராத தவளை காட்டப்பட்டுள்ளது.

உவமானம் - தவளை

உவமேயம் - அறிவற்றோர்

பொதுத்தன்மை - அறியாமை

அறிவுடையோர் நல்லவர்களைக் கண்டவுடன் அவர்களுடன் கலந்துறவாடுவர் என்பதற்கு உவமையாக காட்டிலுள்ள வண்டு தாமரையின் தேனை நுகர்வது காட்டப்பட்டுள்ளது.

உவமானம் - வண்டு

உவமேயம் - அறிவுடையோர்

பொதுத்தன்மை - அறிந்துகொள்ளுதல்

(iv) (அ) சினிமா, நாடகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பதனால் வளராமல் உள்ளது.

(ஆ) நாடகமேடை மாதிரியே **செட்** போடப்பட்டு காமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு நாடகம் நடிப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது.

(v) (அ) சொந்தநாட்டை விட்டுப்பிரிகின்ற சோகமான மனநிலையில் கூறப்பட்டது.

(ஆ) வரகும், எள்ளும் முதிர்ந்து காணப்படுகின்ற புன்செய் நிலங்களும், தேன் வளமும் நிறைந்த நாடாகக் காணப்படுகின்றது.

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

**3. குகப்படலம்**

**(அ)**

உறவினர்களும், தேவர்களும் வணங்கும்படி நின்ற கோசலையை கண்டு இவர் யார்? என குகன் வினவ பரதன் பின்வருமாறு கோசலையை அறிமுகம் செய்கின்றான்.
அரசர்கள் தினமும் வந்து தங்குகின்ற முன்றிலை உடைய தசரதச்சக்கரவர்த்தியின் முதல் பட்டத்து ராணியாக விளங்குபவள், மேலும் மூன்று உலகையும் படைத்த பிரம்மனை தன் நாபிக்கமலம் மூலம் முன் படைத்த திருமாலின் அவதாரமாகிய இராமனைத் தன் மகனாக பெற்றெடுத்த சிறப்புக்குரியவள். இது மட்டுமன்றி தான் பிறந்த காரணத்தினால் தான் பெற வேண்டிய அரச செல்வமனைத்தையும் துறந்த பெருமைக்குரியவள் எனப் பரதன் குகனுக்கு உரைத்தான். இதனை

"கோக்கள் வைகும் முற்றத்தான் முதல்தேவி
மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்..."

என்ற பாடல் மூலம் விளங்கிக் கொள்ளலாம்

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

குகப்படலத்திலே கம்பருடைய கவித்துவச்சிறப்பு வெளிப்படுகின்றது. அதனை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்

- மணிப்பிரவாள மொழி நடையினை கையாண்டிருத்தல்
- இதிகாசக் கதையின் தன்மைகளை பாடல்களில் வெளிப்படுத்தியிருத்தல்
- ஓசை நயம் மிக்கதாக பாடல்கள் இடம்பெற்றிருத்தல்
- இதிகாசக் கதாபாத்திரங்களின் உரையாடல் சார்ந்ததாக பாடல்கள் இடம்பெற்றுள்ளமை
- தமிழ்மொழியுடன் வடமொழிச் சொற்களையும் இணைத்திருத்தல் - கொற்றம், குரிசில்
- அணிகளை பொருத்தமான இடங்களில் கையாண்டு இருத்தல் - உவமையணி, உருவகஅணி
- வாசகரின் மனதில் காட்சி தோன்றும் வகையில் பாடல்கள் விளங்குதல்
- பக்திச் சுவையினை படிப்பவர் மனதில் ஏற்படுத்தும் வகையில் பாடல்கள் இடம்பெற்றிருத்தல்

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**சங்கப்பாடல்கள்**

**(அ)**

தலைவியானவள் தலைவனைப் பிரிந்திருந்தாலும் இன்பமாக இருக்கின்றாள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, அவளது கரங்களில் அணிந்திருந்த கை வளையல்கள் இறுக்கமுற அமைந்திருந்தன. அவை கீழே கழன்று விழவில்லை. காரணம் தலைவியின் அருகில் தலைவன் இல்லாத போதும் அத் தலைவன் மீது தலைவி கொண்ட காதலை தன் உள்ளத்தே பெருகச் செய்து தலைவி இன்பமடைந்திருந்தாள் எனும் கருத்து இங்கு புலப்படுகின்றது. அந்தவகையிலே சிறு குதிரை பூட்டப்பட்ட வண்டியில் ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையில் இழுத்து இன்பமடையும் சிறுகுழந்தைகள் போல தலைவி தலைவனுடன் கூடி இன்பம் பெறாவிட்டாலும் தன் உள்ளத்தே நட்பைப் பெருகச் செய்து இன்புற்றமையினால் தலைவியின் கைகளில் அணிந்துள்ள வளையல்கள் இறுக்கமாகக் காணப்படுவதால் தலைவன் வராதவிடத்தும் தலைவி இன்பமாக இருக்கிறாள் என்பது உணர்த்தப்படுகிறது.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

செறிந்த மணலினால் செய்யப்பட்ட வண்டல் பாவைக்கு பூக்களைப் பறித்துச் சூட்டி குளிர்ந்த பொய்கையிலே விளையாடுகின்ற மகளிரோடு கைகோர்த்து அவர்கள் தழுவிய இடமெல்லாம் தழுவி, அசைந்த இடத்து அசைந்து ஒளித்துச் செய்யும் செயலினை அறியாத வஞ்சனையற்ற இளம் மைந்தர் கூட்டத்தோடு சேர்ந்து விளையாடுதல். உயர்ந்த கிளைகளையுடைய மருதமரத்தினைக் கொண்ட நீர்த் துறையிலே பதிந்து நீருக்கு அருகாக தாழ்ந்து கிடக்கும் கிளையிலே ஏறி, அழகு நிறைந்த ஆற்றங்கரையிலே நிற்பவர்கள் வியக்கும் வண்ணம் அலைகளிலே நீர்த்துளிகள் மேலே எழ ஆழம் மிகுந்த நீர்க்குட்டத்திலே "துடும்" எனும் ஒலி எழுப்பும் வகையிலே பாய்ந்து குளித்து விளையாடுதல், அந்நீரிலே மூழ்கி அடியிலே இருக்கும் மணலினை எடுத்து வந்து காட்டிய வஞ்சனையற்ற இளமைப்பருவம் என வஞ்சனையற்ற இளைஞர்களின் செயற்பாடுகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன. இதனை

**"திணிமணல் செய்யுறு பாவைக்கு கொய் பூத் தைஇத்**
**தண் கயம் ஆடும் மகளிரொடு கை பிணைந்து**
**தழுவு வழித் தழீஇ தூங்கு வழித் தூங்கி....."** எனும் பாடலடிகளினூடாக அறியலாம்.

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**4. எது நல்ல சினிமா**

**(அ)**

நல்ல சினிமாவில் சினிமா மொழி முக்கியமானதாகும். அதாவது காட்சிப் படிமங்கள், அக்காட்சிப் படிமங்களுக்கு ஏற்ற ஒலி, மற்றும் படத்தொகுப்பு எனும் பண்புகளை முறையாகக் கொண்டிருப்பதே ஓர் நல்ல சினிமா எனப்படும்.

**காட்சிப்பமம்**

சினிமாவினுடைய காட்சிகள் எல்லாமே அழுத்தமான ஆழமான வரிசையான காட்சிப்படிமங்களால் வெளிப்படுத்தப்படும் போது அங்கு நல்ல சினிமா பிறக்கும்.
சினிமாவின் முக்கிய கூறு காட்சித் தொடர்களே.
சினிமா மொழியை உணர்ந்து காட்சிப்படிமங்களை அழுத்தமாகக் கையாளும் போது நல்ல சினிமா பிறக்கின்றது. இதிலிருந்து மாறுபட்டு வாய்ப்பேச்சால் கதை சொல்ல முற்பட்டால் சினிமா நலிவடைகின்றது.
காட்சிப்படிமம் - உதாரணம் - அழியாத கோலங்கள் திரைப்படம் சிறந்த ஒரு காட்சிப்படிமத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

**ஒலி**

பேசும் வார்த்தைகள் இயல்பான ஒலிகள் காட்சிப்படிமத்தை மேலும் விளக்குவதாக அமைகின்ற போது நல்ல சினிமா பிறக்கும்.
சினிமா உருவாக்கத்தில் ஒலிக்கு முக்கிய பங்குண்டு
அதற்குத் தாங்கலாக இசை வருகின்றது. இது பல வகைகளில் கையாளப்படுகின்றது.
இயல்பான ஒலி, பேசும் வார்த்தைகள் என்பதற்கு பாரதிராஜாவின் கல்லுக்குள் ஈரம் திரைப்படம் சிறந்த ஒரு ஒலிக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

**படத்தொகுப்பு**

காட்சிப்படிமங்களையும் ஒலிப்பதிவுகளையும் அர்த்தமுள்ள கோர்வையாக அமைப்பதே படத்தொகுப்பாகும்.
காட்சிப்படிமங்களும் ஒலிப்பதிவுகளும் அர்த்தமுள்ள கோர்வையாக அமைய வேண்டும்.
சினிமாவின் அடித்தளமாக அமைவது படத்தொகுப்பாகும்.
கோவைப்படுத்தப்படும் முறைமைக்கு ஏற்ப அதன் அர்த்தமும் மாறும்
இதனை இணைப்பதை மூன்று முறைகளில் காட்டுகின்றார்.
கண் இமைப்பது போல காட்சி மாறுவது கட் (Cut) எனப்படும்.
ஒரு காட்சி மயங்கி அடுத்த காட்சி திரையில் தோன்றுவது மயங்கித் தெளிதல் (Dissolve) எனப்படும்.
திரை இருண்டு பின் காட்சி வருவது இருண்டு தெளிதல் (**Fade in & fade – out)** எனப்படும்.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

காட்சிப் படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளர்ச்சியடையாமை.
சினிமா நாடகத்திற்குள் அடிமைப்பட்டு இருத்தல்.
சினிமா மொழியினை, அதன் பண்பினை முறையாக வளர்த்துக் கொள்ளாமை.
பேச்சுக்கும், பாட்டுக்கும் அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்தல்.
வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்படுதல்

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**இலட்சியமும் சமநோக்கும்**

**(அ)**

தனி மனிதனிடத்தில் இலட்சியம் அமையா விட்டால் இலட்சியம் அமைந்த ஒரு சமுதாயத்தினை உருவாக்க முடியாது. சமூகத்தில் உள்ள பலர் தத்தம் இயல்புக்கு ஏற்ப இலட்சியங்களைக் கடைபிடிப்பதால், ஒழுகுவதால் உலகம் இனிமை பெறுகிறது. இலட்சியவாதிகள் தாமும் வாழ்ந்து தான் வாழும் சமூகமும் வாழ்வதற்கு வழிகாட்டுவர். அதுவே நற்சமூக உருவாக்கத்திற்கு காரணமாகின்றது. இலட்சியம் உடையோர் உயர்வு தாழ்வு பாராட்டார். அதனால் சமூகத்தில் நிலை குலைவு ஏற்படாது. குறைநிறைகளைச் சீர்தூக்கி குறிக்கோள்களை ஏற்படுத்திச் செயற்பட்டு நற் சமூக உருவாக்கத்திற்கு உதவுகின்றனர். சமூகப் பயன்களை காணச் செய்வது இலட்சியம். இலட்சியவாதிகள் பழைமை, புதுமை ஆகிய இரு நிலைகளையும் இணைத்து சமூகத்தினை உருவாக்க வழிவகுப்பர்.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

- தாம் பெற்ற இலட்சியப் பயனை தியாகம் செய்து சமபுத்தியின் சிகரத்தில் நின்ற நல்லோருள் தருமபுத்திரரும் ஒருவர்.
- அறத்தையே இலட்சியமாகக் கொண்டு அறத்தின் பயனாகக் கிடைத்த முத்தி இன்பத்தினை தியாகம் செய்து சமனிலையில் நின்றவர். இதனால் சிறந்த அறநெறிச் செல்வருக்கு உதாரணமாக விளங்குபவர்.

- புழுத்த நாய்க்கும் தமக்கும் இடையே ஒருமைத் தன்மையினைக் காண்பவர்.
- நாயின் துன்பத்தை தமக்கு நேர்ந்த துன்பமாகக் கருதி அதற்கும் முத்தியின்பம் வேண்டி நின்றவர்.
- நாய்க்கு முத்தியின்பம் மறுக்கப்பட்ட போது தமக்கும் அது வேண்டாம் எனக் கருதி நின்றவர்.
- இவ்வாறு தருமனின் இலட்சிய நெறி பிற உயிரையும் தன் உயிராக கருதுகின்ற தன்மையினூடாக புலப்படுகின்றது.

(07 **புள்ளிகள்)**
(08 + 07 = 15 **புள்ளிகள்)**

**5. மூத்தம்மா**

**(அ)**
மூத்தம்மா சிறுகதையின் பிரதான பாத்திரமாக விளங்குபவர் மூத்தம்மா ஆவார். இவர் பல்வேறு நல்ல குணப்பண்புகளைக் கொண்டவராகக் காணப்படுகின்றார். அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- கிராமத்து பழைமையான பழக்கவழக்கங்களில் நம்பிக்கை உடையவர்.
- வெற்றிலை போடுவதில் விருப்பமுடையவர்
- தன் பேரக்குழந்தைகள் மீது பேரன்புடையவர்.
- வீட்டுவேலைகளைச் சுறுசுறுப்பாக செய்கின்றவர்.
- ஊரவர்களின் சுகதுக்கங்கள், பிரசவம் என்பவற்றில் அழையாமலே சென்று பங்குபற்றி உதவிகள் புரிபவர்.
- நோய்வந்தாலும் படுக்கையில் படுக்காது வீட்டு வைத்தியத்தின் மூலம் சுகப்படுத்திக் கொள்பவர்.
- அல்லுக்குத்து, கருகமணிமாலை, செப்புக்காப்புகள் என்பவற்றை அணிந்து அலங்காரமாய் இருப்பவர்.
- தைரியமும் உற்சாகமும் உடையவர்.
- கடின உழைப்பும் பழைமையில் நம்பிக்கையும் கொண்டவர்.
- கைப்பணி வேலைகள் சிறப்பாக செய்பவர். அதாவது பனை மரத்தின் ஓலை சீவி பெட்டி, தட்டுக்கள் செய்பவர்.
- பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணும் மன உறுதி கொண்டவர்.

(05 **புள்ளிகள்)**

**(ஆ)**
இச்சிறுகதையிலே இடம்பெறும் கிராமம் பல்வேறு பழக்க வழக்கங்களையும் வாழ்வியல் அம்சங்களையும் கொண்டதாக அமைந்து காணப்படுகின்றது. அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- பக்குல் கத்துவது யாரேனும் இறப்பதற்கு அறிகுறி என நம்புதல்.
- மரத்தின் கீழ் பாய் விரித்து படுத்து உறங்குதல்.
- பக்குலை விரட்ட நெருப்புத்தணலில் உப்புப் போடுதல்.
- பசு வளர்த்து பால்கறந்து காய்ச்சிக் குடித்தல்.
- சிறுபிள்ளைகள் ஊஞ்சல் கட்டி ஆடுதல்.
- பெண்கள் வெற்றிலை பாக்குடன் கராம்பு, சாதிக்காய் போன்றவற்றைச் சேர்த்து துவைத்து உண்ணுதல், ஆண்கள் சுருட்டுப்பிடித்தல்.
- கரத்தை வண்டியில் பிரயாணம் செய்தல், விறகு எடுக்க காட்டுக்குச் செல்லல்.
- உரலில் அரிசியை இடித்து மாவாக்கி பலகாரங்கள், உணவுகள் செய்தல்.
- வீட்டு வைத்தியத்தை நம்புதல்.
- நேர்த்திக்கடன் வைத்தல்.
- பனைமர ஓலையைச் சீவி பாய், தட்டு, பெட்டி என்பவற்றைச் செய்தல்.
- காதில் அல்லுக்குத்து, கழுத்தில் கருகமணிமாலை, கையில் காப்பு என்பவற்றை அணிதல்.
- பிரேதத்திற்கு அருகில் சாம்பிராணி புகையை வைத்தல்.
- தலைப்பிரசவத்தை வீட்டில் வைத்துக் கொள்ளல்.
- கிராம மக்களிடத்தே ஒற்றுமை காணப்படல், பெரியாரை மதித்து நடத்தல்.
- ஆமணக்குக் கொட்டை, நன்னாரி வேர், உழுவரிசி போன்றவற்றைக் கொண்டு எண்ணெய் காய்ச்சி தலைக்கு வைத்தல்.

(05 **புள்ளிகள்)**
(05 + 05 = 10 **புள்ளிகள்)**

**6. சீறி ஓடாத வருங்கால மனித நதி**

(அ)

அலுவலகத்திற்கு வந்த இளைஞனைப் பற்றிய ஆசிரியரின் கவலை பின்வருமாறு வெளிப்படுகின்றது.

- பரிதாபத்தின் மொத்த வடிவமாக முன்னே வந்து நின்றான் எனக் கவலைப்படல்.
- கையொப்பம் இடச் சொன்ன போது அவன் வெட்கித் தலைகுனிந்து சிரித்ததை **செத்த சிரிப்பு** எனக் கூறுதல்
- அவன் இட்ட கைநாட்டின் மேல் தன்னுடைய இதயம் கழன்று விழுந்ததாகவும் பின்னர் கருகிப் பற்றியதாகவும் கூறுதல்
- அழகிய தோற்றம் உடைய அந்த இளைஞன் தன்னுடைய காதல் உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்துவான் எனக் கவலை கொள்ளுதல்
- தான் காதலித்த பெண்ணின் வேலி ஓரமெல்லாம் காகத்தைப் போல கரைந்து திரிவானோ எனப் பரிதாபப்படல்
- எதிர் காலத்தில் ஒரு நதியைப் போல பொங்கி ஓடவேண்டிய அந்த இளைஞன் எழுதத் தெரியாத காரணத்தினால் ஒரு குட்டைக்குள் சிறுதுளியாக உறைந்து விடுவான் என மன வேதனை அடைதல்
- அந்த இளைஞனுடைய நிலைமைக்கு காரணமான உலகப் பாடசாலைகளை நொந்து கொள்ளுதல்
- அவன் வருகையால் இனி தன்னால் அலுவலகத்தில் ஒரு வேலையும் பார்க்க முடியாது என வருந்துதல். இதனை

**"பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாய்**
**என் முன்னே நின்றான்..."**

**கையொப்பம் இடு என்றேன் இடது கையின் பெருவிரலை**
**ஊன்றி வெட்கிச் சிரித்தான் அது ஒரு செத்த சிரிப்பு..."**

**"என் இதயம் கழன்று அவன் இட்ட ஒப்பத்தின் மேல் விழுந்து**
**கத்தியது பின் கருகிப் பற்றியது.."** என்ற பாடலடிகள் வாயிலாக அறியலாம்.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

எழுதத் தெரியாத அந்த இளைஞன் பிற்காலத்திலே பின்வருகின்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரும் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

- எதிர்காலத்தில் தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி வளர்ச்சி அடைய முடியாமல் போய் விடும்.
- தன்னுடைய காதல் உணர்வுகளை எழுத்தின் மூலம் எழுதி வெளிப்படுத்த முடியாமல் போய் விடும்.
- அவனது அழகும் இளமைப் பருவமும் பயனற்றதாக அமைந்து விடும்.
- எழுதத் தெரியாத காரணத்தினால் பிறரிடத்தில் அவமானப்பட நேரிடும்.
- எழுதத் தெரியாமையினால் தன்னுடைய உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் போய்விடும்.
- தன்னுடைய காதல் உணர்வுகளை காதலியின் வேலி ஓரம் காகத்தைப் போல் ஒலி எழுப்பி கூற வேண்டிய நிலை ஏற்படும்.
- எதிர் காலத்தில் சீறி ஓட வேண்டிய அவனுடைய வாழ்க்கை ஒரு சிறு துளியாய் ஓர் இடத்தில் உறைந்து விடும் நிலை ஏற்படும். இதனை

**"காகம் போல் அவன் விழுந்தவளின் வேலி ஓரமெல்லாம்**
**கரைந்து திரிவானோ எழுத வருகின்ற உணர்ச்சிகளை.."**

**"அந்த நதி வரும் நாளில் சீறி ஒலியெழுப்பி**
**பாய்ந்து ஓடாது உறையும் சிறு துளியாய்..."** எனும் பாடலடிகள் விளக்குகின்றன.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**7. தனிப்பாடல்கள்**

(அ)

நீக்க வேண்டிய பிழைகளை நீக்குதல், கடல் போன்ற நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உண்ணல், பொதிகை மலையிலே தவழ்கின்ற தென்றலைத் துணையாகக் கொள்ளல், வனப்பு மிக்க கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே ஏறிக்கொண்டு இடிபோல இடித்து, மின்னலைப் போல மின்னி, மழை போன்று கவிமழை பொழிதல். போன்ற விடயங்கள் காளமேகத்தின் கவிச்சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

ஆடிக் குடத்தை அடையும் - பாம்பு படமெடுத்து ஆடிய பின் குடத்தினுள் சென்று அடைந்துவிடும்.
எள்ளு செக்கிலே ஆட்டப்பட்டு குடத்தினுள் எடுத்து அடைக்கப்படும்

ஆடும் போது இரையும் - பாம்பு படம் எடுத்து ஆடும் போது இரையும்.
எள்ளு செக்கிலே ஆட்டப்படும் போது இரைச்சல் உண்டாகும்.

மூடித்திறக்கின் முகம் காட்டும் - பாம்பு குடத்தில் அடைத்து மூடிப் பின் திறக்கும் போது தலையைத் தூக்கிக் காட்டும்.
எள்ளு குடத்தின் மூடியைத் திறந்தால் எண்ணெயில், பார்ப்பவர் முகத்தைக் காட்டும்.

ஓடி மண்டை பரபரக்கும் - பாம்பு தீண்டினால் விசம் தலைக்கேறி தலை பரபரக்கும்
எள்ளு எண்ணெய்யை தலையில் வைத்தால் தலையில் பரபர எனும் உணர்வு ஏற்படும்.

பிண்ணாக்கு உண்டாம் - பாம்பு பிளவு பட்ட நாக்கினைக் கொண்டிருக்கும்
எள்ளு எண்ணெய் ஊற்றிய பின் மீதமாக பிண்ணாக்காக வருதல்.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

***